**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

*******

**ஆணை எண். 181/ந/2019**

**நாள். 24.02.2022**

திரு.எம்.எஸ்.முஹம்மது சாலிஹு, – முறையீட்டு மனுதாரர்
சென்னை.

ஆணையாளர், – எதிர்மனுதாரர்
காயல்பட்டினம் நகராட்சி.

சென்னை, முத்துமாரி செட்டி தெரு, பழைய எண்.37, புதிய எண்.86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலிஹு என்பவரின் 23.10.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.10.2019 அன்று பெறப்பட்டு 181/2019 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு காயல்பட்டினம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் அவருடைய வாக்குமூலம் ஆகியவை கவனமாக பரிசீலினை செய்யப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

சென்னை, முத்துமாரி செட்டி தெரு, பழைய எண்.37, புதிய எண்.86 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.எம்.எஸ்.முஹம்மது சாலிஹு என்பவர் தமது மனுவில்.

"2016 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தமிழகத்தில், உள்ளாட்சி அமைப்புகளில் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இதனை வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டு காயல்பட்டினம் நகராட்சி உட்பட மாநிலத்தின் ஏனைய உள்ளாட்சிகள், வழமையான முறைக்கேடுகளையும் மக்களுக்கு விரோதமாக பல்வேறு பணிகளையும் செய்து வருகிறார்கள். மேலும்,

- காயல்பட்டினம் நகராட்சியில் ஜனவரி 2018ல், TURIF என்ற திட்டத்தின் கீழ், ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில், 5 சாலைகள் Paver Block சாலைகளாக அமைக்க டெண்டர் திறக்கப்பட்டது. அந்த ஐந்து சாலைகள் அப்பாபள்ளி தெரு, சொளுக்கார் தெரு, மக்தூம் தெரு, சதுக்கை தெரு வடக்கு பகுதி மற்றும் செப்புக்குடைஞ்சான் தெரு.

- Paver Block சாலைகள், வாகன போக்குவரத்திற்கு உகந்தவை அல்ல, இவ்வகையான கற்கள் Parking பகுதிகளிலும், நடைமேடை (Platform) பகுதிகளிலும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த கற்கள் கொண்டு நகரில் அமைக்கப்பட்ட பல சாலைகள் சில காலங்களிலேயே சிதலடைந்துள்ளன.

- Paver Block சாலைகள் அமைக்கப்படும் என கேள்வியுற்றவுடன், நூற்றுக்கணக்கான மக்களின் கையெழுத்துடன் இந்த சாலைகள் தார் சாலைகளாக புனரமைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை நகராட்சி நிர்வாகத்துறை அதிகாரிகளிடம் வைக்கப்பட்டது.

- அப்போது ஆணையராக இருந்த திரு.பொன்னம்பலம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கிய பதிலில் இது குறித்து CMA அலுவலகத்திற்கு எழுதுவதாக தெரிவித்தார். அதன் பிறகு இருமுறை RDMA அலுவலகமும், காயல்பட்டினம் நகராட்சியிடம் இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என வினவி கடிதங்கள் எழுதியது. ஆனால் தான் பொறுப்பில் இருந்த காலம் வரை திரு.பொன்னம்பலம் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

- அவர் இடமாற்றம் செய்யப்பட்ட பிறகு திரு.பிரேம் ஆனந்த் அவர்கள் காயல்பட்டினம் நகராட்சியில் மார்ச் 2018 இல் ஆணையராக பெறுப்பேற்றார். அதன் பிறகு மக்கள் கோரிக்கையை கருத்தில்கொண்டு ஐந்து சாலைகளில் மூன்று சாலைகள் தார் சாலைகளாக அமைக்கப்பட காயல்பட்டினம் நகராட்சி தீர்மானம் (1623) நிறைவேற்றியது. ஆகஸ்ட் முதல் வாரம் திருத்தியமைக்கப்பட்ட மதிப்பீடுகளும் காயல்பட்டினம் நகராட்சி மூலம் CMA அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டது.

- ஆகஸ்ட் 2018க்கு பிறகு, காயல்பட்டினம் நகராட்சி இதுகுறித்து மேல் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920–ன்படி (Section 22) தீர்மானங்களை செயல்முறைக்கு கொண்டுவருவது ஆணையரின் கடமையாகும். ஆனால் இதுகுறித்து எந்த நடவடிக்கையும் காயல்பட்டினம் நகராட்சி எடுக்கவில்லை.

- CMA அலுவலகத்திற்கு பொது மக்கள் சார்பாக பலமுறை கடிதம் கொடுக்கப்பட்டது. இது குறித்து கூடுதல் தகவல் RDMA அலுவலகத்தில் கேட்கப்பட்டுள்ளதாக CMA அலுவலகத்தில் வாய்மொழியாக தெரிவிக்கப்பட்டது.

- RDMA அலுவலகத்தில் விசாரித்த போது தார் சாலையாக புனரமைக்க பிப்ரவரி 2019–ல் பரிந்துரைத்து கடிதம் அனுப்பப்பட்டுவிட்டதாக தெரிவித்தார்கள். அதன்பிறகு பாராளுமன்ற தேர்தல் காலம் வந்ததால் அதனை காரணமாக கூறி, அதன்பிறகு தார் சாலையாக மாற்றும் பணி நடக்கும் என CMA அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டது.

- நிலைமை இவ்வாறு இருக்க, இவ்வாண்டு ஜுலை மாதம் திடீரென 3 தெருக்களில் ஒரு தெருவான அப்பாபள்ளி தெருவில் Paver Block கொண்டு சாலைப்பணிகள் துவங்கின.

- தார் சாலையாக அமைக்கவேண்டும் என நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியபிறகு, எவ்வாறு Paver Block சாலை அமைக்கப்படுகிறது என நகராட்சியில் விசாரித்ததில், மாவட்ட ஆட்சியரின் உத்தரவுப்படி இது நடந்ததாகவும் தெரிவித்தார்கள்.

- இது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியர் பிறப்பித்த உத்தரவு ஏதும் உள்ளதா என தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விசாரித்ததில் இதுகுறித்து ஆவணம், ஆட்சியர் அலுவலகத்தில் இல்லை என தெரிவிக்கப்பட்டது. இதே கேள்விக்கு பதில் வழங்கிய நகராட்சி, மாவட்ட ஆட்சியர் வாய்மொழியாக இந்த உத்தரவை பிறப்பித்தார் என தெரிவித்துள்ளது.

- உச்சநீதிமன்றத்தின் பல்வேறு தீர்ப்புகள், அரசு அதிகாரிகள், வாய்மொழி உத்தரவுகள்படி செயல்படக்கூடாது என தெரிவிக்கின்றன. மேலும் ஜூலை 2018 அன்று தார் சாலையாக புனரமைக்க நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மேல் அதிகாரிகளால் ரத்து செய்யப்படவோ மாற்றம் செய்யப்படவோ நிறுத்திவைக்கப்படவோ இல்லாத நிலையில், அந்த தீர்மானத்தை மீறி, மக்கள் விரும்பாத Paver Block சாலைகள் அப்பாபள்ளி தெருவில் அமைக்கப்பட்டுள்ளது. இது மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, விதிமுறை 22யை மீறிய செயலாகும்.

- Paver Block சாலைகள் அமைக்கப்பட்டதால் அந்த தெரு மக்களுக்கு பல இன்னல்கள் ஏற்பட்டுள்ளது.

- 4.5 மீட்டர் அகலத்திற்கு சாலைகள் போடப்படும் என கூறப்பட்டு, சாலையோரங்களில் மரம் வைக்கவோ, மழைநீர் வடிகால் அமைக்கவோ, எந்த இடைவெளியும் விடப்படாமல் Paver Block கற்கள் சாலை அகலம் முழுவதும் மதில் முதல் மதில் வரை (Wall to Wall) பதிக்கப்பட்டுள்ளன.

- பழைய சாலை தோண்டப்படாமல் ஏற்கனவே இருந்த சாலையில் இந்த உயரமான கற்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதனால் சாலை உயரம் அதிகரித்து வீடுகள் தாழ்ந்துள்ளன. இதன் விளைவாக வீடுகளுக்குள்ளும், சந்துகளுக்குள்ளும் மழை நீர் வருகிறது. சந்துகளிலும் வீடுகளுக்குள்ளும் மழை நீர் வராமல் இருக்க பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து பொது மக்கள் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதற்கான வசதி இல்லாதவர்கள், என்ன செய்வது என தெரியாமல் உள்ளார்கள்.

- 2018ஆம் ஆண்டு வெளிவந்த சித்தாலப்பாக்கம் பஞ்சாயத்து வழக்கு தீர்ப்பில், சென்னை உயர்நீதிமன்றம் புதிய சாலைகளை போடும்போது பழைய சாலைகள் தோண்டிப்போடப்படவேண்டும் என தெரிவித்துள்ளது. அதனையும் மீறி காயல்பட்டினம் நகராட்சி செயல்பட்டுள்ளது.

- எனவே, 2018 ஆம் ஆண்டு நகராட்சி நிறைவேற்றிய தீர்மானத்தை அமல்படுத்த முயற்சிகள் எடுக்கவேண்டிய காயல்பட்டினம் நகராட்சி ஆணையர் கடமை தவறி மாவட்ட ஆட்சியர் வாய்மொழியாக அந்த தீர்மானத்தை மீறி செயல்பட கூறினார் என தெரிவித்து, மனுவில் அப்பாபள்ளி தெரு சாலையில், விதிகளை மீறி, மக்களுக்கு மிக சிரமங்களையும் மன உளைச்சலையும், பொருளாதார நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ள காரணத்தால் அவர் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், பொது மக்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை மாவட்ட நகராட்சி சட்டம் 1920 விதிமுறை 343படி வழங்கிட உத்தரவிடவும் தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

- மேலும், 15.01.2018 நாளிட்ட மனுவில் பேவர் பிளாக் சாலைகளால் நன்மைகளை விட தீமைகள் அதிகமாக உள்ள காரணத்தால், நகரில் பேவர் பிளாக் சாலைகள் அமைக்க அனைத்து ஜமாத்துகளும், பொது நல அமைப்புகளும் கடந்த காலங்களில் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளதை தாங்கள் அறிவீர்கள். குறிப்பாக – சி–கஸ்டம்ஸ் சாலை, பேவர் பிளாக் முறையில் புனரமைக்கப்பட்ட திட்டமிடப்பட்ட போது, நகரின் அனைத்து ஜமாத்துகளும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்து, தரமான தார் சாலை போட கோரியதை தாங்கள் அறிவீர்கள். ஊர் மக்களின் நிலை இவ்வாறு இருக்க – எங்கள் ஜமாத்துகளுக்கு உட்பட்ட அப்பாபள்ளி தெரு, சொளுக்கார் தெரு, மக்தூம் தெரு, சதுக்கை தெரு வடக்கு பகுதி மற்றும் செப்புக்குடைஞ்சான் தெரு ஆகியவற்றில் – பேவர் பிளாக் சாலைகள் அமைக்க டெண்டர் விடப்பட்டுள்ளதாக அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். இது ஏற்றக்கொள்ள கூடிய செயல் அல்ல. இது சம்பந்தமான கருத்து கேட்போ, பொது மக்களிடம் முன் ஆலோசனையோ செய்யப்படாமல் எடுக்கப்பட்ட முடிவாக இது தெரிகிறது. எனவே, இந்த சாலைகள் அமையவுள்ள பகுதிகளின் ஜமாத்துகள் சார்பாக, பேவர் பிளாக் சாலை போடும் முயற்சியை கைவிடும்படி தங்களை கேட்டுக்கொள்கிறோம். எங்கள் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இப்பகுதிகளில் பேவர் பிளாக் சாலைகளுக்கு பதிலாக, தரமான தார் சாலை போடும்படியும் தங்களை கேட்டுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்கள்.

2) இம்மனு தொடர்பான அறிக்கையை அனுப்பி வைக்குமாறு 19.11.2019 நாளிட்ட இம்முறைமன்ற கடிதம் வாயிலாக காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

“காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் தமது 21.02.2020 நாளிட்ட அறிக்கையில் காயல்பட்டணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ன் கீழ், ரூபாய்.100.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சியின் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் அதிகமாக சேதமடைந்த ஐந்து சாலைகளில் (அப்பாபள்ளி தெரு சாலை, மக்தூம் தெரு, செப்புகுடைஞ்சான் தெரு, சதுக்கைத் தெரு சாலையில் ஜலாலியா ஹால் முதல் வடக்குபகுதி மற்றும் சொளுக்கார் தெரு சாலை) சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து மேம்பாடு செய்திட நகர்மன்ற தீர்மானம் எண்.1414 நாள்.25.07.2017ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு அதன்படி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.21422/2017/E3 நாள்.03.10.2017ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.24545/2017/DO2 நாள்.30.11.2017ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி 09.01.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்திரவு வழங்கப்பட்டு அதன்படி தற்பொழுது அனுமதிக்கப்பட்ட ஐந்து பணிகளில் 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள மூன்று சாலைப்பணிகளையும் செய்யவிடாமல் இதே புகார்தாரர், பொதுமக்கள் தார்சாலையைத்தான் விரும்புவதாக பல்வேறு புகார் மனுக்களை உயர் அலுவலர்களுக்கு அனுப்பி அதன்படி முடிக்கப்படாத மூன்று சாலைகளையும் சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து சாலை அமைப்பதற்கு பதிலாக தார்சாலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையின்படி, முடிக்கப்படாத மூன்று பணிகளையும் தார்சாலைகளாக மாற்ற திருத்திய மதிப்பீடுகள் தயார் செய்து அதற்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1623 நாள்.31.07.2018ன்படி மன்ற அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி பெற சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் தற்பொழுது மீதமுள்ள மூன்று சாலைப்பணிகளில் அப்பாபள்ளி தெருவில் வசிக்கும் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர், தூத்துக்குடி அவர்களிடம் சாலைப்பணி தொடர்பாக முறையிட்டதின்படி, திட்டப்பணி அனுமதிக்கப்பட்டு பல நாட்கள் கடந்துவிட்டதாலும் திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற காலதாமதம் ஏற்படுவதாலும் பொதுமக்களின் நலன் மற்றும் வடகிழக்கு பருவ மழையின் காரணமாக எடுக்கப்படவேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கையின்படியும் ஏற்கனவே நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டின்படி அப்பாபள்ளி தெரு சாலையை அமைத்திட நகராட்சி ஆணையாளரிடம் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நேரடியாக கண்டிப்புடன் அறிவுறுத்தப்பட்டதால் பொதுமக்களின் நலன் கருதி அப்பாபள்ளி தெரு சாலை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி சிமெண்ட கல்பதித்து சாலை அமைக்கப்பட்டது. மேலும் சாலை அமைக்கப்படாத மீதமுள்ள இரண்டு சாலைகளையும் (சொளுக்கார் தெரு சாலை மற்றும் மக்தூம் தெரு சாலை) தார்சாலைகளாக மாற்ற திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.1869 நாள்.09.08.2019ன்படி மன்ற அனுமதி பெறப்பட்டு திருத்திய நிர்வாக அனுமதி பெற சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது சொளுக்கார் தெருவில் வசிக்கும் பொதுமக்களின் கோரிக்கையின்படியும் காவல்துறை துணை கண்காணிப்பாளர், திருச்செந்தூர் அவர்களின் நேரடியான அறிவுரையின்படியும் தற்பொழுது சொளுக்கார் தெரு சாலையினையும் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட மதிப்பீட்டின்படி சிமெண்ட்கல் பதித்து சாலை அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது.

மேலும் இந்நகராட்சியில் மழைநீர் வடிந்து செல்ல போதுமான மழைநீர்வடிகால்கள் இல்லாததால் நகராட்சியின் சாலைகள் மழைக்காலங்களில் உடனடியாக சேதமடைந்து விடுவதால் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேற்கண்ட திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஐந்து சாலைகளும் மழைக்காலங்களில் அதிக அளவு பாதிக்கப்பட்ட சாலையாக இருந்ததால் அச்சாலையினை சிமெண்ட் பேவர் பிளாக்கல் பதித்து சாலை அமைத்திட தேர்வு செய்யப்பட்டது. தற்பொழுது பணிமுடிக்கப்பட்டுள்ள மூன்று சாலைகளும் நல்ல முறையில் பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.

3) மனுதாரர் மற்றும் காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 20.01.2020 அன்று நேரடி விசாரணைக்கு வருமாறு 26.12.2019 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. 20.01.2020 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்.

''காயல்பட்டினம் நகராட்சியில் ஜனவரி 2018யில் TURIF என்ற திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 5 சாலைகள் பேவர் பிளாக் சாலைகள் அமைக்க டெண்டர் திறக்கப்பட்டது. அந்த 5 சாலைகள் அப்பாபள்ளி தெரு, சொளுக்கார் தெரு, மஃதூம் தெரு, சதுக்கை தெரு வடக்கு பகுதி, செப்புக்குடைஞ்சான் தெரு ஆகியவை ஆகும். இந்த 5 சாலைகள் மக்கள் பிரதிநிதி இல்லாத காரணத்தினாலும், இணையதளத்தில் காயல்பட்டினம் நகராட்சி பதிவேற்றம் செய்வதில்லை என்ற காரணத்தினாலும் இந்த 5 சாலைகள் பேவர் பிளாக் சாலைகளாக புனரமைக்கப்படும் என்று தெரியாது. பேவர் பிளாக் சாலைகள் வாகன போக்குவரத்திற்கு உகந்தவை அல்ல. இவைகள் பொதுவாக நடைமேடை அமைப்பதற்கே உகந்தவைகளாகும். இந்த செய்தி கேள்விப்பட்டவுடன் இந்த சாலைகள் தார் சாலைகளாக மாற்ற வேண்டும் என நூற்றுக்கணக்கான மக்களின் கையெழுத்திட்டு மனு அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கும் மேலாண்மை இயக்குநர் TNUIFS மற்றும் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர், நகராட்சி மண்டல இயக்குநர் திருநெல்வேலி சம்பந்தப்பட்ட காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளருக்கு உள்ளூர் மக்களின் விருப்பத்தை பொது மக்கள் சார்பாக திரு.ஏ.சதகத்துல்லா என்பவரால் காயல்பட்டினம் நகராட்சிக்கு அனுப்பப்பட்டது.

இதுவிஷயம் நெல்லை தினகரன் பதிப்பில் காயல்பட்டினம் நகர ஜெமாத் சார்பாக மனு கொடுத்த செய்தியும் 23.01.2018 ல் வெளியானது. மாவட்ட ஆட்சி தலைவரிடமும் வழங்கப்பட்டது. 15.01.2018 ஆணையருக்கு முகவரியிட்டு பொது மக்கள் சார்பாக கையெழுத்திட்டு ஒவ்வொரு தெருவிற்கு ஒவ்வொரு கோரிக்கை மனு வழங்கப்பட்டது. மாவட்ட ஆட்சி தலைவரிடம் 22.01.2018ல் வழங்கப்பட்ட மனுவிற்கு மனுவில் கண்டுள்ள சாலை 2018 TURIF திட்டத்தின் கீழ் நகராட்சிகளில் நிர்வாக இயக்குநனர் அவர்களால் நிர்வாகம் நிதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. எனவே மேற்கண்ட நிர்வாக நிதி மாற்றப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் என குறிப்பிட்டு நகராட்சி ஆணையாளரால் பதில் அளிக்கப்பட்டது. நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் தம்முடைய 25.01.2018 நாளிட்ட கடிதத்தில் நகராட்சி ஆணையர் காயல்பட்டினத்திற்கு அனுப்பிய கடிதத்தில் அதுகுறித்த பதில் அறிக்கையினை மனுதாரருக்கு அனுப்பவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மண்டல நிர்வாக இயக்குநருக்கு பதில் அனுப்பப்பட்டது.

இந்நிலையில் நகராட்சி 30.01.2018 தேதிய சாதாரண கூட்டத்தில் மனுவில் குறிப்பிடப்பட்ட 5 சாலைகளுக்கும் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்து குறைவாக விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.அலெக்சாண்டர் என்பவரின் ஒப்பந்தபுள்ளியை அங்கீகரிக்க பொருள் வைக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. இதற்கிடையில் எந்த பணியும் நடைபெறவில்லை. 26.03.2018 அப்பா தெரு மசூதி, மறைக்கார் பள்ளி மசூதி, மக்தூம் பள்ளி, புதுப்பள்ளி மற்றும் இளைஞர் ஐக்கிய முன்னணி குருவி துறை பள்ளி வாசல் ஆகியவைகள் ஒன்றிணைந்து அனைத்து ஜமாத் சார்பில் பேவர் பிளாக் சாலையை அமைப்பதை கைவிட்டு தரமான தார்சாலையை அமைக்க துரிதமாக போட தீர்மானம் நிறைவேற்றி ஆணையர், காயல்பட்டனம் நகராட்சிக்கு அனுப்பப்பட்டது. அதில் நகராட்சிகளின் மண்டல இயக்குநர், நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சருக்கு அனுப்பப்பட்டது.

திரும்பவும் 02.04.2018ல் நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர் இரண்டு மாதங்களாக கோரிய நடவடிக்கைக்கு எந்தவித பதிலும் அனுப்பாத நிலையில் தாமதம் இன்றி திரு.சதகத்துல்லா மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை மனுதாரருக்கு தெரிவிக்குமாறு குறிப்பிட்டு கடிதம் அனுப்பப்பட்டது. இதன் அடிப்படையில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் 26.03.2018 நாளிட்டு ஏற்கனவே எங்களால் அனுப்பப்பட்ட கடித நிலை குறித்து கோரப்பட்டது அதற்கு கேள்வி எண்.8 அனுப்பி பதிலாக நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் வழங்க பரிசீலனையில் உள்ளது என குறிப்பிட்டு பதில் அனுப்பினார்கள். ஆனால் எங்களது 22.01.2018 மனுவிற்கு மாவட்ட ஆட்சி தலைவரிடமிருந்து அவர்கள் அனுப்பிய பதிலில் நிர்வாக அனுமதி மாற்றுவது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டது என குறிப்பிட விரும்புகிறேன்.

இதற்கிடையே 2 ஜம்மாத்துக் கிடையில் இதுபோன்று சாலைகளை மாற்றி கேட்டால், சாலைகள் வருவது கஷ்டம். இது மாநில அரசின் நிதி என்பதால் இந்த பணம் திரும்ப மாநில அரசிற்கே திரும்ப சென்றுவிடும், அந்த பள்ளி வாசல் சம்பந்தப்பட்ட 2 சாலைகளில் பேவர் பிளாக் சாலைகள் போட்டுவிட்டார்கள் இந்த 2 சாலைகள் அமைக்கும் பணி முடிந்தவுடன் அப்போது இருந்த ஆணையாளர் திரு.பொன்னம்பலம் வேலை மாறுதலில் சென்று விட்டார். திரு.பிரேம் ஆனந்த் என்பவரிடம் இந்த கோரிக்கை வலியுறுத்தியதுடன் அவர் உடனடியாக 31.07.2018 ல் ஒரு தீர்மானம் நிறைவேற்றினார். இந்த தீர்மானத்தில் சம்பந்தப்பட்ட 2 பகுதியை தவிர மீதி 3 சாலைகள் பகுதிகளுக்கு பேவர் பிளாக் சாலைகள் பதிலாக தார் சாலைகள் அமைக்கவும் ஏற்கனவே நிர்வாக மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1 கோடிக்கு மிகாமல் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் உரிய ஆணையிட தீர்மானம் அனுமதிக்கப்பட்டது.

மாற்றப்பட்ட நிலையில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையாளர் காயல்பட்டினம் நகராட்சிக்கு கூடுதல் பொறுப்பிற்கு ஆணையாளராக மாற்றப்பட்டார்.

இந்த நிலையில் நகராட்சி ஆணையாளர் திரு.பிரேம் ஆனந்த் அவர்கள் மாற்றப்பட்டார். நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்ட தபால் குறித்து அரசுக்கும் ஆணையாளருக்கும் 13.11.2018ல் கடிதம் கொடுக்கப்பட்டது. அதற்கு பதில் எழுத்து பூர்வமாக இதுவரை பெறப்படவில்லை ஆனால் வாய்மொழியாக மண்டல பொறியாளரிடம் அறிக்கை பெறப்பட்டதாக கூறப்பட்டது. அதற்கு பிறகு தற்பொழுது மண்டல பொறியாளர் திருமதி.சுப்புலட்சுமி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு தார் சாலைகளாக மாற்றி அமைப்பதற்கு பரிந்துரை செய்வதாக சொல்லிவிட்டார்கள். அதற்கு பிறகு பாராளுமன்ற தேர்தல் வந்துவிட்டதால் தேர்தலுக்கு பின்பு இந்த பணிகள் மேற்கொள்ளப்படும் என சொல்லிவிட்டார்கள். அதற்கு பின்பு திரு.முருகன் பதவி ஒய்வு பெற்றுவிட்டதால் திரு.சுரேஷ் நகராட்சி பொறியாளர் ஆணையாளர் கூடுதல் பொறுப்பில் இருந்தார். அப்பாபள்ளி தெருவில் மக்களுடைய ஆட்சேபனை இருக்கும் பொழுதே, அதை பொருட்படுத்தாமல் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டது. சொளுக்கார் தெரு மற்றும் மக்தூம் தெரு, இந்த இரண்டு எஞ்சிய தெருக்களை சேர்ந்தவர்கள் எங்களுக்கு தார் சாலைகள் தான் வேண்டும் என்று கடிதம் கொடுத்தார்கள். அப்பா பள்ளி தெருவிற்கு பேவர் பிளாக் சாலைகள் போட்டுக் கொண்டு இருக்கும் பொழுது தங்களுக்கு தார் சாலைகள் தான் வேண்டும் என்று சொல்லி 102 பேர் கையெழுத்து போட்ட கடிதம் காயல்பட்டினம் நகராட்சி ஆணையருக்கு கொடுக்கப்பட்டது. ஆனாலும் அதை மீறி பேவர் பிளாக் சாலை போடப்பட்டது.

தற்பொழுது பொறுப்பில் உள்ள ஆணையாளரிடம் கோரியதற்கு அப்பாபள்ளி தெரு சாலை மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடி அறிவுரையின்படி பேவர் பிளாக் சாலையாக போடப்பட்டது என கூறினார். RTI யில் இது குறித்து மாவட்ட ஆட்சியரிடம் கேட்டதற்கு அவ்வாறு ஆவணம் எதுவும் இல்லை என தெரிவித்தார்.

மதிப்பீட்டுபடி அப்பாபள்ளி தெரு சாலையை 200 மி.மீ தோண்டி போட வேண்டும். ஆனால் சாலை தோண்டப்படவில்லை. மேலும் சாலையின் அகலம் 5 மீட்டர் மட்டும் போட வேண்டும். ஆனால் மதில் to மதில் சுமார் 8 மீட்டருக்கு போட்டுள்ளார்கள். இதனால் சாலை உயரம் மேலும் உயர்ந்து வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. (இதுகுறித்து எடுக்கப்பட்ட புகைப்பட நகல்களும் இத்துடன் சமர்ப்பித்துதுள்ளேன்) இதனால் பல ஆயிரம் செலவு செய்து வீட்டிற்குள் மழை நீர் புகுந்துவிடாமல் பொது மக்கள் பாதுகாத்துள்ளார்கள். ஏற்கனவே இது சம்பந்தமாக உயர்நீதிமன்றம் உத்தரவை மீறி நகராட்சி சாலை உயரமாக போட்டுள்ளார்கள். மாவட்ட நகராட்சிகளின் பிரிவு 343ன்படி இதனால் ஏற்பட்டுள்ள நஷ்டத்தினை காயல்பட்டினம் நகராட்சி ஈடு செய்யவேண்டும். ஏற்கனவே புதிய சாலை பணி மேற்கொள்ளும் போது ஏற்கனவே போடப்பட்ட பழைய சாலையை தோண்டி அந்த பகுதிகளை அகற்றிவிட்டு புதியதாக சாலை பணி அமைக்க வேண்டும் என உயர்நீதிமன்ற ஆணையே உள்ளது. திட்ட மதிப்பீட்டிலும் பழைய சாலை அகற்றுவதற்கு ரூ.16,600/- திட்ட மதிப்பீட்டில் சேர்ந்துள்ளது. ஆனால் இந்த பணியை செய்யாமலேயே புதியதாக பேவர் பிளாக் பதித்ததால் சாலையின் உயரம் வீட்டின் உயரத்தை விட அதிகமாகி மழை காலங்களில் வீட்டிற்குள் மழைநீர் புகுந்துள்ளது. அளவை புத்தகத்தின் நகல் என்னால் 23.10.2019 ல் கோரப்பட்டது. அளவீடுகள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டது என பதில் வந்தது. மீண்டும் அது குறித்து தகவல் அறியும் உரிமை சட்டத்தில் கோரியுள்ளேன். இதற்கு முன்பு வழங்கப்பட்ட அளவை புத்தகங்களும் சரியான முறையில் இல்லை.

மேலும், இந்த திட்ட மதிப்பீடு தயாரிப்பிலும் முறைக்கேடு நடந்துள்ளது. PWD SOR (2017-18), Paver Block சதுரஅடி ரூ.52 மட்டும், அதன்படி அதற்கான செலவு ரூ.40 லட்சம் தான்

வரவேண்டும். ஆனால் ரூ.58 லட்சம் போட்டுள்ளார்கள், மேலும் Kerb Wall முறையாக அமைக்கவில்லை (Wall to Wall என்ற காரணத்திற்காக). ஆனால் மதிப்பீட்டில் அதற்கு ரூ.20 லட்சம் வழங்கப்பட்டுள்ளது'' என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

4) காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் 20.01.2020 அன்றைய விசாரணைக்கு வர இயலாததால் 05.10.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

05.10.2021 அன்றைய நேரடி விசாரணையில் காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பணிமேற்பார்வையாளர் இருவரும் ஆஜராகி கீழ்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்.

''காயல்பட்டிணம் நகராட்சியில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் 2017–2018–ன் கீழ், ரூபாய் 1 கோடி மதிப்பீட்டில் 5 சாலைகளில் சிமெண்ட் பேவர் பிளாக் கல் பதித்து மேம்பாடு திட்டமிடப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேற்கண்ட 5 சாலைகளில், 2 சாலைகளுக்கு பேவர் பிளாக் போடப்பட்டது. மீதமுள்ள 3 தெருக்களுக்கு பேவர் பிளாக் போடக் கூடாது என்றும், தார் சாலை போட வேண்டும் என பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, மேற்கண்ட இடங்களில் தார் சாலை அமைப்பதற்கு ஒப்புதல் கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. அதற்கான பதில் பெறப்படாததால், பொதுமக்ககளின் நலன் கருதி அப்பாபள்ளி தெரு மற்றும் சொளுக்கார் தெருவில் பேவர் பிளாக் பதிக்கப்பட்டது என்பதை இம்முறை மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறோம்''.

5) இந்நேர்வில் மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம், காயல்பட்டினம் நகராட்சி ஆணையாளரின் அறிக்கை, நகராட்சி ஆணையாளர் மற்றும் பணிமேற்பார்வையாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

''காயல்பட்டினம் நகராட்சியில் ஜனவரி 2018 ல் TURIF என்ற திட்டத்தின்கீழ் ஒரு கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1) அப்பாபள்ளி தெரு, 2) சொளுக்கார் தெரு, 3) மக்தூம் தெரு, 4) சதுக்கை தெரு வடக்கு பகுதி, 5) செப்புக்குடைஞ்சான் தெரு ஆகிய ஐந்து தெருக்களில் சிமெண்ட் பேவர் பிளாக் கல்பதித்த சாலை அமைக்க நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்ட போது பேவர் பிளாக் கல்பதித்த சாலைதான் அமைய போகிறது என்ற தகவல் தமக்கும், மக்களுக்கும் தெரியாது என்று தெரிவித்து இச்சாலை வாகன போக்குவரத்திற்கு உகந்தவை அல்ல இச்சாலை சிலகாலங்களிலேயே சிதைந்து விடும் என்றும் மனுதாரர் எதிர்ப்பு தெரிவித்ததற்கு நகராட்சி நிர்வாகம் 25.07.2021 நாளிட்ட நகர்மன்ற கூட்டத்தில் அனுமதி பெற்று முறைப்படி மேல் அதிகாரிகளின் அனுமதி பெற்ற ஐந்து பணிகளில் 2 பணிகள் முடிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள மூன்று சாலை பணிகளையும் செய்யவிடாமல் மனுதாரர் மற்றும் பொது மக்கள் புகார் கொடுத்து தார்சாலை தான் வேண்டும் என்று கோரியுள்ள நிலையில், திருத்திய மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் பெற கால தாமதமாகும் என்பதாலும், வடகிழக்கு பருவமழையின் காரணமாகவும் முன் எச்சரிக்கை நடவடிக்கையாக ஏற்கனவே பெற்ற நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதியின்படி அப்பாபள்ளி தெருவில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள இரண்டு சாலைகளையும் தார் சாலைகளாக மாற்ற நடவடிக்கை மேற்கொண்டபோது, சொளுக்கார் தெருவும், மக்களின் விருப்பப்படி சிமெண்ட் கல்பதித்த சாலையாக அமைக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளதை காயல்பட்டினம் நகராட்சி ஆணையர் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது.

இருப்பினும் ஐந்து சாலைகளும் பேவர் பிளாக் சாலைகளாக அமைக்க போவது தெரிந்ததும், பேவர் பிளாக் சாலை அமைப்பது வாகன போக்குவரத்துக்கு உகந்தவை அல்ல. எனவே, இந்த சாலைகளை தார் சாலையாக மாற்ற வேண்டும் என்று நூற்றுக்கணக்கான மக்கள் கை எழுத்திட்டு, நகராட்சி நிர்வாக இயக்குநர், அரசு செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாவட்ட ஆட்சி தலைவர், நகராட்சி மண்டல இயக்குநர், திருநெல்வேலி மண்டலம், காயல்பட்டணம் நகராட்சி ஆணையர் ஆகியோர்களிடம் பொது மக்களால் மனு கொடுக்கப்பட்டுள்ளது. இது நெல்லை தினகரன் பதிப்பிலும் வெளிவந்துள்ளது. இவை எதனையும் ஆணையாளர் பொருட்படுத்தவில்லை. மேலும் ஐந்து சாலைகளில் 2 சாலையில் பேவர் பிளாக் போடப்பட்டதும் மீதமுள்ள மூன்று சாலைகளுக்கு பேவர் பிளாக் போடக்கூடாது என்றும் தார் சாலை தான் போட வேண்டும் என பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து மேற்கண்ட மூன்று சாலைகளிலும் தார் சாலை அமைப்பதற்கு ஒப்புதல் கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அதற்கான அனுமதி பெறப்படாமல் பேவர் பிளாக் சாலையே போடப்பட்டுள்ளது. இதற்கு பொதுமக்கள் நலன் கருதி, மழைகாலம் வரும் நிலை என்று நிர்வாகத்தால் காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் ஏற்க கூடியதாக இல்லை. பொதுமக்கள் எதிர்ப்பு அதிகமாக இருக்கும் பட்சத்தில் அவர்களின் கோரிக்கையை பரிசீலினை செய்திருக்க வேண்டும். மேலும், மூன்று சாலைகளில் தார் சாலை போட ஒப்புதல் கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி பதில் பெறும் முன் பேவர் பிளாக் சாலை போடப்பட்டுள்ளது. அதற்கு பின்னேற்பும் பெறப்பட வில்லை இது அதிகாரிகள் தன் அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியும், பெரும்பாலான மக்களின் மனநிலையை கருத்தில் கொள்ளாமலும் தன்னிச்சையாக செயல்பட்டுள்ளதையே காட்டுகிறது. நிர்வாக சீர்கேடாகவே இதை காண முடிகிறது. இவ்வாறு முறைகேடாக செயல்பட்ட சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கோரி நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், மனுதாரர் எழுப்பியுள்ள கூடுதல் நிதி விரயமாகி உள்ளது, (ரூ.40 இலட்சத்திற்குப் பதிலாக ரூ.58 இலட்சம்) Kerb well அமைக்க ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டது குறித்த குற்றச்சாட்டுகளுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் தொழில்நுட்பக்குழு மூலம் மதிப்பீடுகள், செலவு செய்யப்பட்டது மற்றும் Kerb well நிர்ணயிக்கப்பட்டது பற்றி தணிக்கை செய்து உரிய நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்படுகிறது. RDMA இதுகுறித்து இரண்டு மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்க ஆணையிடப்படுகிறது.

"The act of the Kayalpattinam Commissioner and the officials concerned in the matter of laying Paver Block roads instead of B.T. Roads as requested by the local users is not acceptable to say the least. The issue was taken to the notice of the District Collector and Director of Municipal Administration was addressed for sanction of B.T Road conversion but for reasons beyond comprehension the Municipal officials had gone ahead with Paver Block choice giving rise to suspicious about the awarding of contract with vested interests. The TURIF scheme does not appear to

be bound with strict time-line for incurring the expenditure by any definite time schedule and in such a context the conduct of the Kayalpattinam Municipal Officials is censured. The Director of Municipal Administration is directed to initiate disciplinary action against the Commissioners and officials responsible for such haste, defiance and adamant attitude in laying paver block roads against the will and choice of the local residents".

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.எம்.எஸ்.முஹம்மது சாலீஹு
பழைய எண்.37, புதிய எண்.86,
முத்து மாரி செட்டி தெரு,
சென்னை – 1.

2) நகராட்சி ஆணையர்,
காயல்பட்டினம் நகராட்சி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

24/2/22
செயலாளர்.

24/02/22